# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC-33/2024

## வழக்கு சாட்சி:PW -1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுரேஷ் | தேதி : | 29.08.2024 |
| தந்தை பெயர்: | அன்புராஜ் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை**

நான் தென்னவநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 15.02.2018 ம் தேதி மாலை 7 மணிக்கு மூலைக்கரைப்பட்டியில் இருந்து தென்னவநேரி திருப்பத்தில் சென்று கொண்டிருக்கும் போது பாலசுப்பிரமணியன் டீக்கடைக்கு முன்பு சென்று கொண்டிருக்கும் போது நான் TN 72 AH 9978 பதிவெண் கொண்ட TATA Ace வாகனத்தை ஓட்டுக்கொண்டு சென்றிருக்கும் போது எதிரி TN 72 BZ 6392 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் வந்து வழிமறித்து ஏல தேவடியா மகனே என்று அசிங்கமாக பேசினார். எனக்கும் எதிரி குடும்பத்திற்கும் ஏற்கெனவே இடப்பிரச்சனை காரணமாக முன்விரோதம் இருந்து வந்தது. எனது வண்டியின் வலது இடது கண்ணாடியை கையால் ஓங்கி அடித்து உடைத்துவிட்டார். அதில் எனக்கு கண்ணத்தில் சிறு இரத்த காயம் ஏற்பட்டது. இதை பார்த்து மரியதாஸ் , இம்மானுவேல், இன்னொரு ஆள் பெயர் தற்சமயம் எனக்கு மறந்துவிட்டது. மேற்படி மூன்றுபேரும் வந்து எதிரியை சத்தம் போட்டார்கள். எதிரி சென்று விட்டார். அதன்பின்பு நான் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். எனக்கு

ஏற்பட்ட காயத்திற்கு வீட்டிலேயே இருந்து தைலம் போட்டு குணப்படுத்திவிட்டேன். உடைக்கப்பட்ட கண்ணாடியின் மதிப்பு சுமார் ரூ.3000 இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் எழுதி கொடுக்கப்பட்டதுதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த புகார் மனு அ.சா.ஆ-1 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள Splender பைக் TN 72 BZ 6392 என்ற பதிவெண் கொண்ட வாகனம் எதிரி ஓட்டிவந்ததுதான். அது என்னால் நீதிமன்றதில் இன்று அடையாளம் காட்டப்பட்டது. அந்த இருசக்கர வாகனத்தின் புகைப்படம் சா.பொ.1 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லலை.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை

## வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC-33/2024

## வழக்கு சாட்சி:PW -2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பொன்னு துரை | தேதி : | 29.08.2024 |
| தந்தை பெயர்: | முருகன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை**

நான் தென்னவநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் பாத்திர வியாபாரம் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 15.02.2018 ம் தேதி மாலை 7 மணி அளவில் எங்கள் ஊரை சார்ந்த மரியதாஸ், இம்மானுவேல் ஆகியோர்கள் எங்கள் ஊர் விலக்கில் உள்ள பாலசுப்பிரமணியன் என்பவரது டீக்கடை முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த சுரேஷ் என்பவர் TN 72 AH 9978 என்ற பதிவெண் கொண்ட TATA Ace வாகனத்தை ஓட்டி வந்தார். அப்போது எதிரி TN 72 BZ6392 என்ற பைக்கில் வந்து வழி மறித்து தேவடியா மகனே அசிங்கமாக பேசி TATA Ace வாகனத்தின் வலது இடது பக்க கண்ணாடியை கையால் உடைத்துவிட்டார். இதற்கு ஏதோ முன்விரோதம் இருந்தது தெரியவந்தது. கண்ணாடி உடைந்ததில் சுரேஷ் என்பவரின் கண்ணத்தில் பட்டு ரத்தம் வந்தது. நாங்கள் எதிரியை சத்தம் போட்டோம். அவர் பைக்கை எடுத்து சென்றுவிட்டார். அதன் பின்பு சுரேஷ் என்பவர் மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எதிரி ஓட்டி வந்த வாகனம் TN 72 BZ6392 இன்று நீதிமன்றத்தில் என்னால் அடையாளம்

காட்டப்பட்டது.   இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை

**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC-33/2024**

**வழக்கு சாட்சி:PW -3**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | இம்மானுவேல் | **தேதி :** | 29.08.2024 |
| **தந்தை பெயர்:** | ஆபிரகாம் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | | **வயது:** | |

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை**

நான் தென்னவநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் பாத்திர வியாபாரம் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 15.02.2018 ம் தேதி மாலை 7 மணி அளவில் எங்கள் ஊரை சார்ந்த மரியதாஸ், பொன்னுதுரை மற்றும் நான் ஆகியோர்கள் எங்கள் ஊர் விலக்கில் உள்ள சுப்பிரமணியன் என்பவரது டீக்கடை முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த சுரேஷ் என்பவர் TN 72 AH 9978 என்ற பதிவெண் கொண்ட TATA Ace வாகனத்தை ஓட்டி வந்தார். அப்போது எதிரி TN 72 BZ 6392 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து வழி மறித்து தேவடியா மகனே அசிங்கமாக பேசி TATA Ace வாகனத்தின் வலது இடது பக்க கண்ணாடியை கையால் உடைத்துவிட்டார். இதற்கு ஏதோ சொத்து சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது தெரியவந்தது. கண்ணாடி உடைந்ததில் சுரேஷ் என்பவரின் கண்ணத்தில் பட்டு ரத்தம் வந்தது. நாங்கள் எதிரியை சத்தம் போட்டோம். அவர் பைக்கை எடுத்து சென்றுவிட்டார். அதன் பின்பு சுரேஷ் என்பவர் மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எதிரி ஓட்டி வந்த வாகனம் TN 72 BZ6392 இன்று

நீதிமன்றத்தில் என்னால் அடையாளம் காட்டப்பட்டது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை